FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8323724

1. District : மாவட்டம் தென்காசி PS: ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல்நிலையம் Year: 2026 ஆண்டு FIR No.: 13/2026 முத.அ. எண் Date: 23.09.2026 நாள்

2. (i) Act சட்டம்: PC Act 1988 (as amended in) Act 16 of 2018 Sections பிரிவுகள்: 7, 8
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 08.07.2023 Date to : நாள் வரை 22.09.2026
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 23.09.2026 Time : நேரம் 12.30 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : எழுத்து மூலமாக
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் Block Development office, Kadayam. 20 Km South East.
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் ச.சுப்பிரமணியன்
(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் திரு.சங்கர சுப்பிரமணிய பிள்ளை
(c) Date / Year of Bird : நாள் / பிறந்த ஆண்டு 04.01.1968
(d) Nationality : நாட்டினம் இந்தியன்
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் தனி வட்டாட்சியர்
(g) Address : முகவரி சமூக பாதுகாப்புதிட்டம், செங்கோட்டை தாலுகா, தென்காசி மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
A-1 திருமதி.R.சந்திரலேகா, ஒன்றிய பொறியாளர், கடையம் ஊராட்சி ஒன்றியம், A-2 திருமதி.சுப்புலட்சுமி, தலைமையிடத்து துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (நிர்வாகம்), கடையம் ஊராட்சி ஒன்றியம், A-3 திருமதி.T.ஆலிஸ் தாயம்மாள், வட்டார வளார்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி), கடையம், A-4 திரு.ரமேஷ், த/பெ திரு.காளிமுத்து, கதவு எண்.1/19, வினைதீர்த்தநாடார் பட்டி முதல் தெரு, திப்பணம்பட்டி, தென்காசி மாவட்டம் (தனி நபர்), A-5 ஒப்பந்ததாரர் திரு.கணேசன் த/பெ திரு.மாரியப்பன், கதவு எண் 6/147, இந்திரா காலணி, மலையன்குளம், பாப்பான்குளம் அஞ்சல், தென்காசி மாவட்டம் (தனி நபர்), A-6 ஒப்பந்ததாரர் திரு.அருண்குமார், த/பெ அருணாசலம், கதவு எண்.28/6, 4வது தெரு, கிருஷ்ணாபுரம், கடையநல்லூர் தாலுகா, தென்காசி மாவட்டம் (தனி நபர்).

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
No delay

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. இன்று 23.09.2026-ம் தேதி மதியம் 12.30 மணிக்கு M.பால் சுதர், துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, தென்காசி ஆகிய நான் அலுவலக பொறுப்பில் இருக்கும்போது செங்கோட்டை தாலுகா சமூக பாதுகாப்பு திட்ட தனி வட்டாட்சியர் திரு.ச.சுப்பிரமணியன் அவர்கள் நிலையம் ஆஜராகி ஒரு புகார் மனுவுடன் செயல்முறை நடவடிக்கை நாள் 22.09.2026-ம் இணைத்து நடவடிக்கை எடுக்க வேண்டி கொடுத்தார். அந்த மனு விபரம் பின்வருமாறு: அனுப்புநர் ச.சுப்பிரமணியன், த/பெ சுப்பிரமணிய பிள்ளை, தனி வட்டாட்சியர், சமூக பாதுகாப்பு திட்டம், செங்கோட்டை தாலுகா, தென்காசி மாவட்டம். பெறுநர் துணை காவல் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, தென்காசி மாவட்டம். அய்யா, பொருள்: தென்காசி மாவட்டம் - ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை – கடையம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தை 22.09.2026-ம் தேதி மாலை திடீர் இணை ஆய்வு செய்தபோது சந்தேகத்திற்குரிய லஞ்சபணம் ரூ.16,000/- கைப்பற்றியது மற்றும் செயலிகள் மூலம் ரூ.11,28,200/-க்கு சந்தேகத்திற்குரிய பண பரிமாற்றம் நடைபெற்றதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுவது தொடர்பாக. தென்காசி மாவட்டம் கடையம் ஊராட்சி

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

23/09/26

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

23/9/2026

Signature of the Officer in-Charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் M. PAULSUTHER.
Rank: நிலை .....No. எண் .....
DSP, VAO AC. Tenkasi

ஒன்றிய அலுவலக ஊழியர்கள் ஒப்பந்ததாரர்களிடமும் மற்றும் பல்வேறு திட்டம் தொடர்பாக அலுவலகத்திற்கு வரும் பொதுமக்களிடம் பணம் வசூல் செய்வதாக கிடைத்த இரகசிய தகவலின்பேரில் தென்காசி ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவு அலுவலக வேண்டுகோளின்படி, தென்காசி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் திரு.M.பால் சுதர் அவர்களுடன் இணைந்து கடையம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தை 22.09.2026-ம் தேதி மாலை 15.00 மணியளவில் திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. அப்போது கடையம் ஊராட்சி ஒன்றிய் பொறியாளர் திருமதி.சு.சந்திரலேகா வைத்திருந்த மொபைலை வாங்கி ஆய்வு செய்தபோது அவரது தொழில்நுட்ப உதவியாளராக இருந்துவரும் திரு.ரமேஷிடமிருந்து ரூ.2,78,500/-மும், ஒப்பந்ததாரர் திரு.முருகனிடமிருந்து ரூ.61,500/-மும், ஆலங்குளம் சேர்மனுக்கு டிரைவராக இருக்கும் திரு.மகாலிங்க மணி என்பவரிடமிருந்து ரூ.40,000/-மும், திரு.வினோத் சங்கர்லால் என்பவரிடமிருந்து ரூ.16,000/-மும் ஆக மொத்தம் ரூ.3,96,000/- செயலி மூலம் பெற்றுள்ளார். மேற்படி பண பரிவர்த்தனை குறித்து திருமதி.சந்திரலேகாவிடம் கேட்டபோது அவர் தகுந்த முகாந்திரம் கூறவில்லை.

யூனியன் பொறியாளர் திருமதி.சந்திரலேகாவுக்கு தொழில் நுட்ப உதவியாளராக பணிபுரியும் திரு.ரமேஷ் வைத்திருந்த மொபைலை வாங்கி ஆய்வு செய்தபோது ஒப்பந்ததாரர் திரு.கணேஷிடமிருந்து ரூ.1,75,000/-ம், ஒப்பந்ததாரர் திரு.சங்கரிடமிருந்து ரூ.34,700/-மும், ஒப்பந்ததாரர் திரு.முருகனிடமிருந்து ரூ.35,000/-மும், ஒப்பந்ததாரர் திரு.நவநீத கிருஷ்ணன் என்பவரிடமிருந்து ரூ.1,80,000/-மும், ஒப்பந்ததாரர் திரு.சேர்மசெல்வம் என்பவரிடமிருந்து ரூ.40,000/-மும், ஒப்பந்ததாரர் திரு.தங்கராஜ் என்பவரின் மனைவி திருமதி.சிதம்பர வள்ளியிடமிருந்து ரூ.40,000/-மும், ஒப்பந்ததாரர் திரு.வெங்கடேஷ் என்பவரிடமிருந்து ரூ.32,500/-ம் ஆக மொத்தம் ரூ.5,37,200/- பெற்றுள்ளார். மேற்படி பண பரிவர்த்தனை குறித்து திரு.ரமேஷிடம் கேட்டபோது அவர் தகுந்த முகாந்திரம் கூறவில்லை.

தலைமைப்பிடத்து துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (நிர்வாகம்) திருமதி.சுப்புலட்சுமி என்பவர் வைத்திருந்த மொபைலை வாங்கி ஆய்வு செய்தபோது ஒப்பந்ததாரர் திரு.நவநீதன் என்பவரிடமிருந்து ரூ.40,500/-மும், ஒப்பந்ததாரர் திரு.முருகன் என்பவரிடமிருந்து ரூ.4,500/-மும், ஒப்பந்ததாரர் திரு.கணேஷிடமிருந்து ரூ.2,000/-மும், ஒப்பந்ததாரர் திரு.சங்கரிடமிருந்து ரூ.5,500/-மும், ஒப்பந்ததாரர் திரு.புவனிடமிருந்து ரூ.3,000/-மும் ஆக மொத்தம் ரூ.55,500/- பெற்றுள்ளார். மேற்படி பண பரிவர்த்தனை குறித்து திருமதி.சுப்புலட்சுமியிடம் கேட்டபோது அவர் தகுந்த முகாந்திரம் கூறவில்லை.

கடையம் வட்டார வளர்ச்சி அலுவலர் திருமதி.அலிஸ் தாயம்மாள் வைத்திருந்த மொபைலை வாங்கி ஆய்வு செய்தபோது திரு.ராயப்பனிடமிருந்து ரூ.1,29,500/-மும், ஒப்பந்ததாரர் திரு.பார்த்திபனிடமிருந்து அவரது மகன் ராகேஷ் பிரபு மூலம் ரூ.10,000/- பெற்றுள்ளார். மேற்படி பண பரிவர்த்தனை குறித்து திருமதி.ஆலிஸ் தாயம்மாளிடம் கேட்டபோது அவர் தகுந்த முகாந்திரம் கூறவில்லை. மேலும் ஒப்பந்ததாரர்கள் திரு.A.அருண்குமார் வைத்திருந்த ரூ.6,000/-க்கும், திரு.கணேசன் வைத்திருந்த ரூ.10,000/-க்கும் தகுந்த முகாந்திரம் கூறாததால் அவர்களிடமிருந்து மொத்தம் ரூ.16,000/- கைப்பற்றப்பட்டது. இந்த சோதனையின்போது கைப்பற்றப்பட்ட ரூ.16,000/- மற்றும் கண்டுபிடிக்கப்பட்ட ரூ.11,28,200/-க்கு செயலிகள் மூலம் சந்தேகத்திற்கிடமான முறையில் நடைபெற்ற பண பரிமாற்றமானது ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்த வேலைகள் செய்வதற்கு அலுவலக ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்த வேலைகள் செய்வதற்கு வட்டார வளர்ச்சி அலுவலர், பொறியாளர்கள் மற்றும் அலுவலக ஊழியர்களுக்கு செயலி மூலம் அனுப்பியிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. இது தொடர்பான செயல்முறை நடவடிக்கை 22.09.2026 மாலை 15.00 மணிக்கு ஆரம்பித்து இரவு 22.15 மணிக்கு முடிக்கப்பட்டது. கடையம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் சோதனையின்போது இருந்த கடையம் ஊராட்சி ஒன்றிய பொறியாளர் திருமதி.R.சந்திரலேகா, தலைமையிடத்து துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (நிர்வாகம்) திருமதி.சுப்புலட்சுமி, கடையம் வட்டார வளார்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) திருமதி.T.ஆலிஸ் தாயம்மாள், திருமதி.சந்திரலேகாவுக்கு தொழில்நுட்ப உதவியாளராக இருக்கும் திரு.ரமேஷ், ஒப்பந்ததாரர்கள் திரு.கணேசன், திரு.அருண்குமார் ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி செயல்முறை நடவடிக்கை மற்றும் ஆவணங்களை தங்களிடம் ஒப்படைக்கிறேன். Sd.23.09.2026, (ச.சுப்பிரமணியன்), தனி வட்டாட்சியர், சமூக பாதுகாப்பு திட்டம், செங்கோட்டை வட்டம். Sir, Received the complaint on 23.09.2026 at 12.30 hrs and registered a case in Tenkasi V&AC, Cr.No.13/2026 u/s 7, 8 of PC Act 1988 (as amended in) Act 16 of 2018 on 23.09.2026 at 14.30 hrs Sd. 23.9.2026, M.Paul Suther, DSP, V&AC, Tenkasi.

22.09.2026-ம் தேதி தென்காசி – அம்பாசமுத்திரம் ரோட்டில் கடையம் பத்திரகாளியம்மன் கோவில் தெருவில் உள்ள சமுதாய நலக்கூடத்தில் தற்காலிகமாக இயங்கிவரும் கடையம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தை தென்காசி மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் நிலையில் செங்கோட்டை சமூக பாதுகாப்பு திட்ட தனி வட்டாட்சியர் திரு.ச.சுப்பிரமணியன் அவர்கள் தலைமையில் திடீர் சோதனை செய்தது சம்மந்தமான செயல்முறை நடவடிக்கைகள். முன்னிலை: 1) திரு.ச.சுப்பிரமணியன், துணை ஆய்வுக்குழு அலுவலர், தென்காசி. தனி வட்டாட்சியர், சமூக பாதுகாப்பு திட்டம்

செங்கோட்டை, தென்காசி மாவட்டம். 2) திரு.M.பால் சுதர், காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, தென்காசி. இன்று 22.09.2026-ம் தேதி பிற்பகல் 12.30 மணிக்கு கடையம் ஊராட்சி ஒன்றிய அலுவலக ஊழியர்கள் ஒப்பந்ததாரர்களிடமும் மற்றும் பல்வேறு திட்டம் தொடர்பாக அலுவலகத்திற்கு வரும் பொதுமக்களிடம் பணம் வசூல் செய்வதாக கிடைத்த இரகசிய தகவலின்படி தென்காசி மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் நிலையில் செங்கோட்டை தாலுகா சமூக பாதுகாப்பு திட்ட தனி வட்டாட்சியர் திரு.ச.சுப்பிரமணியன் அவர்கள் தலைமையில் தென்காசி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் திரு.M.பால் சுதர் மற்றும் காவலர்கள் சகிதம் தென்காசி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் இருந்து மாலை சுமார் 14.15 மணியளவில் காவல் வாகனம் TN 22 G 0995-ல் புறப்பட்டு மத்தளம்பாறை, மாதாபுரம் வழியாக வந்து சுமார் 15.00 மணிக்கு கடையம் பத்தரகாளியம்மன் கோவில் தெருவில் வடக்கு நோக்கி உள்ள சமுதாய நலக்கூடத்தில் தற்காலிகமாக இயங்கிவரும் கடையம் ஊராட்சி ஒன்றிய அலுவகத்தின் போர்டிகோவிற்கு வந்து மெயின் வாசல் வழியாக தரைதளத்தில் உள்ளே வந்தபோது, வாசலுக்கு மேல்புறம் உள்ள கேபின் உள்ளது. அதில் பின்னால் பெயர் கேட்டு தெரிந்து கொண்ட திருமதி.R.சந்திரலேகா, ஒன்றிய பொறியாளர் என்பவர் இருந்தார். அவரிடம் தென்காசி மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் நிலையில் உள்ள செங்கோட்டை சமூக பாதுகாப்பு திட்ட தனி வட்டாட்சியர் திரு.சுப்பிரமணியன் தன்னையும், தென்காசி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குழுவினரையும் அறிமுகப்படுத்திக்கொண்டார். அவர் கடையம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு புதிய கட்டிடம் கட்டப்பட்டு வருவதால் சமுதாய நலக்கூடத்தில் தற்காலிகமாக இயங்கி வருவதாகவும், தரைதளத்தில் பொறியியல் பிரிவும், முதல் தளத்தில் வட்டார வளர்ச்சி அலுவலர் அலுவலகமும் இயங்கிவருவதாக தெரிவித்தார். அதன்பின்னர் அந்த கேபின் சோதனை செய்யப்பட்டது.

கடையம் ஒன்றிய பொறியாளர் திருமதி.சந்திரலேகாவிடம் உள்ள பணத்தை ஆஜர் செய்ய சொன்னதன்பேரில் அவருடைய கைப்பையில் இருந்து ரூ.510/- எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி அலுவலகத்தின் சிறப்பு பதிவேட்டில் சரிபார்த்தபோது அவர் பதிவு ஏதும் செய்யவில்லை. இதுகுறித்து திருமதி.R.சந்திரலேகாவிடம் கேட்டபோது அவர் சிறப்பு பதிவேடு குறித்து தனக்கு தெரியாது என்றும், அதனால் அதில் தான் பணத்தை குறிப்பிட்டு பதிவு செய்யவில்லை என்றும் தெரிவித்தார். மேலும் மேற்படி பணம் தனது சொந்த செலவுக்காக வைத்திருப்பதாக சொன்னதால் ரூ.510/-ஐ அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அவர் வைத்திருந்த Motorola Edge 60 Pro மொபைலை வாங்கி ஆய்வு செய்தபோது அதில் 7402608476, 7402702354 என்ற

இரண்டு சிம் இருந்தது. மேற்படி 7402702354 எண்ணிற்கான G-pay செயலியை பார்த்தபோது அவரது தொழில்நுட்ப உதவியாளரான திரு.ரமேஷ் என்பவரின் செல்போன் எண்.9894201794 லிருந்து 07.08.2024 முதல் 27.01.2026 வரை வெவ்வேறு தேதிகளில் மொத்தம் ரூ.2,78,500/-ம், ஒப்பந்ததாரர் திரு.முருகன் என்பவரின் செல்போன் எண் 9600640855 என்ற எண்ணிலிருந்து 17.10.2025 முதல் 15.08.2026 வரை வெவ்வேறு தேதிகளில் மொத்தம் ரூ.61,500/-ம், தனக்கு முன்னாள் உதவியாளராக பணிபுரிந்து தற்போது ஆலங்குளம் சேர்மனுக்கு டிரைவராக இருக்கும் திரு.மகாலிங்க மணி என்பவரின் செல்போன் எண் 9865948147 என்ற எண்ணிலிருந்து 22.09.2025 முதல் 20.08.2026 வரை வெவ்வேறு தேதிகளில் மொத்தம் ரூ.40,000/-ம், திரு.வினோத் சங்கர்லால் என்பவரின் செல்போன் எண் 9942221837 என்ற எண்ணிலிருந்து 30.01.2026 ம் தேதி ரூ.6,000/- மும், 20.08.2026ம் தேதி ரூ.10,000/-மும் ஆக மொத்தம் ரூ.16,000/-ம் ஆக மொத்தம் ரூ.3,96,000/- பெற்றுள்ளார். இதில் திருமதி.சந்திரலேகா, திரு.வினோத் சங்கர்லால் என்பவரின் செல்போன் எண் 9942221837 என்ற எண்ணின் WhatsAppற்கு 20.08.2026ம் தேதி 10000 SQM amount என்று மெசேஜ் அனுப்பியதும் அவர் ரூ.10,000/- பணம் அனுப்பிய வகைக்கும், திரு.மகாலிங்க மணி 20.08.2026ம் தேதி ரூ.10,000/- அனுப்பிய வகைக்கும் வாட்ஸ்அப் மெசேஜ் screen shot செய்து பதிவிறக்கம் செய்து அத்தாட்சி செய்து விசாரணைக்காக் கைப்பற்றப்பட்டது.

மேற்படி கேபினுக்கு மேல்பக்கம் MGNREGS கணினி அறை உள்ளது. மேற்படி கணினி அறையில் உதவியாளர் திரு.சேர்மை பாண்டி, கணினி ஆபரேட்டர்கள் திருமதி.தங்கராணி, திருமதி.காந்திமதி, திருமதி.மகமுதாள்பேகம், செல்வி.ஆபிதால் பேகம், திரு.பிரபு ஆகியோர் இருந்தார்கள். அவர்களை சோதனை செய்தபோது கணக்கில் காட்டப்படாத பணம் ஏதும் இல்லை.

மேற்படி கணினி அறையின் கிழக்கு பக்கம் யூனியன் பொறியாளர் கேபினுக்கு எதிரே ஒரு கேபின் இருந்தது. அதில் யாரும் இல்லை. அது தொடர்பாக ஒன்றிய பொறியாளரிடம் கேட்டபோது, அது சேர்மன் கேபின் என்று சொன்னார். பின்னர் அந்த கேபின் சோதனை செய்தபோது அதில் கணக்கில் காட்டப்படாத பணம் ஏதும் இல்லை. மேற்படி சேர்மன் கேபினுக்கு கீழ்பக்கம் கணினி இருந்த இடத்தில் திரு.அஜீத் குமார், த/பெ ராஜபாண்டியன், காமராஜ் நகர், புங்கம்பட்டி, திரு.செல்வகுமார், த/பெ குலசேகர பெருமாள், காமராஜ் நகர், வெய்க்கால்பட்டி, திரு.ரமேஷ், த/பெ காளிமுத்து, வினைதீர்த்த நாடார்பட்டி, திப்பணம்பட்டி ஆகியோர் இருந்தனர். அவர்களை குறித்து கேட்டபோது, அவர்கள் ஓவர்சியர் திரு.முருகன், உதவி பொறியாளர் திருமதி.பூச்செண்டு, யூனியன் பொறியாளர் திருமதி.சந்திரலேகா ஆகியோர் தங்களை சம்பளம் கொடுத்து தொழில் நுட்ப உதவியாளராக பணிக்கு வைத்திருப்பதாக தெரிவித்தார்கள். அவர்களை

சோதனை செய்தபோது கணக்கில் காட்டப்படாத பணம் ஏதும் இல்லை. யூனியன் பொறியாளர் திருமதி.சந்திரலேகாவுக்கு தொழில் நுட்ப உதவியாளராக பணிபுரியும் திரு.ரமேஷ் வைத்திருந்த Samsung Galaxy A23 (Model No.SM-A235F/DS) மொபைலை வாங்கி ஆய்வு செய்தபோது அதில் 9894201794, 8608868143 என்ற இரண்டு சிம் இருந்தது. மேற்படி 9894201794 எண்ணிற்கான Phonepe செயலியை பார்த்தபோது ஒப்பந்ததாரர் திரு.கணேஷ் என்பவரின் செல்போன் எண்.9087173213 லிருந்து 11.09.2023 முதல் 26.08.2026 வரை வெவ்வேறு தேதிகளில் மொத்தம் ரூ.1,75,000/-ம், ஒப்பந்ததாரர் திரு.சங்கர் என்பவரின் செல்போன் எண் 7639348479 என்ற எண்ணிலிருந்து 03.05.2024 முதல் 28.08.2026 வரை வெவ்வேறு தேதிகளில் மொத்தம் ரூ.34,700/-ம், ஒப்பந்ததாரர் திரு.முருகன் என்பவரின் செல்போன் எண் 9600640855 என்ற எண்ணிலிருந்து 11.11.2025 முதல் 31.07.2026 வரை வெவ்வேறு தேதிகளில் மொத்தம் ரூ.35,000/-ம், ஒப்பந்ததாரர் திரு.நவநீத கிருஷ்ணன் என்பவரின் செல்போன் எண் 9626962014 என்ற எண்ணிலிருந்து 18.11.2023 முதல் 29.06.2026 வரை வெவ்வேறு தேதிகளில் மொத்தம் ரூ.1,80,000/-ம், ஒப்பந்ததாரர் திரு.சேர்மசெல்வம் என்பவரின் செல்போன் எண் 9940983811 என்ற எண்ணிலிருந்து 05.08.2025 முதல் 22.06.2026 வரை வெவ்வேறு தேதிகளில் மொத்தம் ரூ.40,000/-ம், ஒப்பந்ததாரர் திரு.தங்கராஜ் என்பவரின் மனைவி திருமதி.சிதம்பர வள்ளி என்பவரின் செல்போன் எண் 9842697929 என்ற எண்ணிலிருந்து 28.09.2024 முதல் 18.08.2026 வரை வெவ்வேறு தேதிகளில் மொத்தம் ரூ.40,000/-ம், ஒப்பந்ததாரர் திரு.வெங்கடேஷ் என்பவரின் செல்போன் எண் 9500643501 என்ற எண்ணிலிருந்து 08.07.2023 முதல் 13.05.2026 வரை வெவ்வேறு தேதிகளில் மொத்தம் ரூ.32,500/-ம் ஆக மொத்தம் ரூ.5,37,200/- பெற்றுள்ளார்.

மேற்படி கணினி வைத்திருந்த இடத்தின் அருகே போடப்பட்டிருந்த இருக்கையில் அமர்ந்து கொண்டிருந்த பின்னால் பெயர் தெரிந்து கொண்ட திருமதி.சுப்புலட்சுமி என்பவரை விசாரித்தபோது தான் தலைமையிடத்து துணை வட்டார வளர்ச்சி அலுவலராக (நிர்வாகம்) இருப்பதாகவும், தன்னுடைய இருக்கை மாடியில் இருப்பதாகவும் தெரிவித்தார். பின்பு அவரிடம் உள்ள பணத்தை எடுத்து ஆஜர் செய்ய சொன்னபோது தன்னிடம் பணம் ஏதும் இல்லை என்று தெரிவித்தார். அவர் வைத்திருந்த VIVO T1 5G மொபைலை வாங்கி ஆய்வு செய்தபோது அதில் 9489748928 என்ற சிம் இருந்தது. மேற்படி எண்ணிற்கான Phonepe செயலியை பார்த்தபோது ஒப்பந்ததாரர் திரு.நவநீதன் என்பவரின் செல்போன் எண்.9626962014 லிருந்து 02.04.2026 முதல் 24.08.2026 வரை வெவ்வேறு தேதிகளில் மொத்தம் ரூ.40,500/-ம், ஒப்பந்ததாரர் திரு.முருகன் என்பவரின் செல்போன் எண்.9600640855 லிருந்து 16.05.2026-ம் தேதி ரூ.4,500/-ம், ஒப்பந்ததாரர் திரு.கணேஷ் என்பவரின் செல்போன் எண்.9087173213 லிருந்து

13.11.2024-ம் தேதி ரூ.2,000/-ம், ஒப்பந்ததாரர் திரு.சங்கர் என்பவரின் செல்போன் எண்.7639348479 லிருந்து 24.06.2025, 20.08.2025 ஆகிய இரு தேதிகளில் மொத்தம் ரூ.5,500/-ம், ஒப்பந்ததாரர் திரு.புவன் என்பவரின் செல்போன் எண்.9626409097 லிருந்து 02.08.2024-ம் தேதி ரூ.3,000/-ம் ஆக மொத்தம் ரூ.55,500/- பெற்றுள்ளார்.

மேற்படி கணினி இருந்த இடத்திற்கு கீழ்புறம் ஒரு கேபின் இருந்தது. அதில் யாரும் இல்லை. அதுகுறித்து யூனியன் பொறியாளர் திருமதி.சந்திரலேகாவிடம் கேட்டபோது அது உதவி பொறியாளர் திருமதி.பூச்செண்டு கேபின் என்றும், அவர் வெளியே சென்றிருப்பதாக தெரிவித்தார். பின்னர் மேற்படி கேபின் சோதனை செய்ததில் கணக்கில் காட்டப்படாத பணம் ஏதும் இல்லை. கீழ்பக்கத்தில் மேஜைகள் போடப்பட்டிருந்தது. அதில் உட்கார்ந்து வேலை பார்த்து கொண்டிருந்த சாலை ஆய்வாளர் செல்வன்.மனோஜ் குமார் மற்றும் செல்வன்.முகமது மொய்யதீன் ஆகிய இருவரும் இருந்தார்கள். அவர்களை சோதனை செய்தபோது கணக்கில் காட்டப்படாத பணம் ஏதும் இல்லை.

மேற்படி உதவி பொறியாளர் கேபினுக்கு எதிரே போடப்பட்டிருந்த சேர்களில் பின்னால் பெயர் கேட்டு தெரிந்து கொண்ட திரு.கணேசன், த/பெ மாரியப்பன், 6/147 இந்திரா காலணி, மலையன்குளம் என்பவரை விசாரித்தபோது அவர் தான் ஒப்பந்ததாரராக இருப்பதாக தெரிவித்தார். அவரிடம் உள்ள பணத்தை ஆஜர் செய்ய சொன்னதன்பேரில் அவருடைய இடது பக்க பேண்ட பாக்கெட்டில் இருந்த பர்சில் இருந்து ரூ.2,190/- எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணம் தனது சொந்த செலவுக்காக வைத்திருப்பதாக சொன்னதால் ரூ.2,190/-ஐ அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர் அவரை சோதனை செய்தபோது அவரது பேண்டின் வலது பக்க பாக்கெட்டில் கத்தையாக பணம் இருந்தது. அதனை எடுத்து எண்ணிப்பார்த்தபோது அதில் ரூ.10,000/- (500X20) இருந்தது. மேற்படி பணம் குறித்து திரு.M.கணேசனிடம் கேட்டபோது அவர் தகுந்த முகாந்திரம் சொல்லாததால் மேற்படி பணம் ரூ.10,000/-ஐ விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

பின்னால் பெயர் கேட்டு தெரிந்து கொண்ட திரு.L.முருகன், த/பெ லெட்சுமணன், 7/3/8, மாதாங்கோவில் தெரு, சாம்பவர்வடகரை என்பவரை விசாரித்தபோது அவர் தான் ஒப்பந்ததாரராக இருப்பதாகவும், செங்கோட்டை யூனியனில் கற்குடி ஊராட்சி-கட்டளைகுடியிருப்பு கிராமம் FHTC75 Nos பைப்லைன் விரிவாக்கம் செய்த பணிக்கு குறித்த காலத்தில் முடிக்க முடியாததால் அதற்கு கால நீட்டிப்பு கேட்டு கொடுத்த கடிதத்திற்கு BDO திருமதி.அலிஸ் தாயம்மாள் அவர்களிடம் கால நீட்டிப்பு செய்த ஆணையில் கையெழுத்து விடுபட்டிருந்ததை முன்தேதியிட்டு வாங்க வந்ததாக

தெரிவித்தார். அவர் கையில் வைத்திருந்த கடிதத்தை வாங்கி ஆய்வு செய்தபோது அதில் செங்கோட்டை வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.BDOSCT/633/2024/A2 dated 09.03.2026 என்ற கால நீட்டிப்புக்கான ஆணையில் A2 உதவியாளர் திருமதி.செந்தூராண் 09.03.26ம் தேதியில் சுருக்கொப்பம் இட்டும், வட்டார வளர்ச்சி அலுவலர் கையெழுத்து இடாமல் இருந்தது. திரு.L.முருகனிடம் உள்ள பணத்தை ஆஜர் செய்ய சொன்னதன்பேரில் அவருடைய சட்டை பாக்கெட்டில் இருந்து ரூ.1,310/- எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணம் தனது சொந்த செலவுக்காக வைத்திருப்பதாக சொன்னதால் ரூ.1,310/-ஐ அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேற்படி திரு.முருகனுடன் வந்திருந்த பின்னால் பெயர் கேட்டு தெரிந்து கொண்ட திரு.A.அருண்குமார், த/பெ அருணாசலம், 6/28, 4வது புது தெரு, கிருஷ்ணாபுரம், கடையநல்லூர் என்பவரை விசாரித்தபோது அவர் தான் ஒப்பந்ததாரர் திரு.அருணாசலத்துடன் சேர்ந்து ஒப்பந்த வேலைகள் செய்து வருவதாக தெரிவித்தார். அவரிடம் உள்ள பணத்தை ஆஜர் செய்ய சொன்னதன்பேரில் அவர் தன்னிடம் பணம் ஏதும் இல்லை என்று தெரிவித்தார். பின்னர் அவரை சோதனை செய்தபோது அவரது பேண்டின் வலது பக்க பாக்கெட்டில் கத்தையாக பணம் இருந்தது. அதனை எடுத்து எண்ணிப்பார்த்தபோது அதில் ரூ.6,000/- (100X60) இருந்தது. மேற்படி பணம் குறித்து திரு.A.அருண்குமாரிடம் கேட்டபோது அவர் தகுந்த முகாந்திரம் சொல்லாததால் மேற்படி பணம் ரூ.6,000/-ஐ விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் ஒப்பந்ததாரர் திரு.L.முருகன் வைத்திருந்த செங்கோட்டை வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.BDOSCT/633/2024/A2 dated 09.03.2026 என்ற கால நீட்டிப்புக்கான BDO கையெழுத்திடாத செயல்முறை ஆணையும் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

தரைதளத்தின் வாசல் அருகே முதல் தளத்திற்கு செல்லும் படிக்கட்டுகள் உள்ளது. அதன்வழியாக முதல் தளத்தில் சென்றபோது அது ஒரே ஹாலாக இருந்தது. ஹாலின் மேற்கு பக்கம் மத்தியில் மேடையும், வடபக்கம் உள்ள ஒரு அறையும், தென்பக்கம் ஒரு அறையும் உள்ளது. தென்பக்க அறையில் இருந்த பின்னால் பெயர் கேட்டு தெரிந்து கொண்ட திருமதி.அலிஸ் தாயம்மாள், வட்டார வளர்ச்சி அலுவலர்/ஆணையாளர், கடையம் ஊராட்சி ஒன்றியம் என்பவர் இருந்தார். அவரிடம் தென்காசி மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் நிலையில் உள்ள செங்கோட்டை சமூக பாதுகாப்பு திட்ட தனி வட்டாட்சியர் திரு.சுப்பிரமணியன் தன்னையும், தென்காசி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குழுவினரையும் அறிமுகப்படுத்திக்கொண்டார். அதன்பின்னர் அந்த அறை சோதனை செய்யப்பட்டது. கடையம் வட்டார வளர்ச்சி அலுவலர் திருமதி.அலிஸ் தாயம்மாளிடம் உள்ள பணத்தை ஆஜர் செய்ய சொன்னதன்

பேரில் அவருடைய கைப்பையில் இருந்து ரூ.700/- எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி அலுவலகத்தின் சிறப்பு பதிவேட்டில் சரிபார்த்தபோது அந்த பதிவேடு சரியாக பராமரிக்கப்படாமல் இருந்தது. மேற்படி பணம் குறித்து திருமதி.அலிஸ் தாயம்மாளிடம் கேட்டபோது அவர் தனது சொந்த செலவுக்காக வைத்திருப்பதாக சொன்னதால் ரூ.700/- ஐ அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அவர் வைத்திருந்த Poco F1 மொபைலை வாங்கி ஆய்வு செய்தபோது அதில் 7402608474 என்ற சிம் இருந்தது. மேற்படி எண்ணிற்கான G.Pay செயலியை பார்த்தபோது ராயப்பன் என்பவரின் செல்போன் எண்.9791433568 லிருந்து 17.05.2025 முதல் 05.03.2026 வரை வெவ்வேறு தேதிகளில் மொத்தம் ரூ.1,29,500/- பெற்றுள்ளார். மேலும் திருமதி.அலிஸ் தாயம்மாள் அவரது மற்றொரு VIVO V30e மொபைலில் உள்ள 8637461948 என்ற எண்ணின் WhatsApp செயலில் இருந்து ஒப்பந்ததாரர் திரு.பார்த்திபனுக்கு அவரது மகன் ராகேஷ் பிரபுவின் வங்கி கணக்கு எண் 42322347990, SBIN0014464, Gpay No.8300174005 என மெசேஜ் அனுப்பியுள்ளார். பின்பு திரு.பார்த்தீபன் செல் நம்பர் 8526039145 என்ற எண்ணிற்கு 13.03.2026ம் தேதி ரூ.10,000/- அனுப்பி Screen shot எடுத்து அனுப்பியுள்ளளார். மேற்படி பணபரிவர்த்தனை குறித்து திருமதி.அலிஸ் தாயம்மாளிடம் கேட்டபோது அவர் தகுந்த முகாந்திரம் தெரிவிக்கவில்லை. மேற்படி WhatsApp செயலியில் Screen shot எடுத்து அனுப்பியதை பதிவிறக்கம் செய்து அத்தாட்சி செய்து விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

ஹாலின் வடமேற்கு மூலையில் உள்ள அறையில் வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) திரு.கணேசன் அறை என்றும், அவர் வெளியே சென்றிருப்பதாக தெரிவித்தார். மேற்படி மேடையின் முன்பு தலைமையிடத்து துணை வட்டாட்சியர் (பஞ்சாயத்து) தலைமையிடத்து துணை வட்டாட்சியர் (நிர்வாகம்) ஆகிய இரண்டு இருக்கைகளிலும் ஆள் இல்லை. இது தொடர்பாக திருமதி.அலிஸ் தாயம்மாளிடம் கேட்டபோது, திரு.ராஜேந்திரன் டிரெயினிங்கிக்கு சென்றிருப்பதாகவும், திருமதி.சுப்புலட்சுமி கீழே இருப்பதாக தெரிவித்தார். ஹாலின் தென்புறம் உள்ள வரிசையில் வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) தொடர்பான பணியாளர்கள் தலைமயிடத்து துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (மதிய உணவு) திருமதி.தமிழ்செல்வி செல்லம்மா, கணக்கர் திருமதி.அ.சந்திரா, தட்டச்சர் திருமதி.கண்மணி, உதவியாளர் திரு.சு.முத்துக்குமார், கணினி ஆபரேட்டர் திருமதி.இந்திரா, திருமதி.கிருஷ்ண கீதா ஆகியோரும், வடபுறத்தில் வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) தொடர்பான பணியாளர்கள் இளநிலை உதவியாளர் திரு.ஆவுடைக்கண், ரெக்கார்டு கிளர்க் திருமதி.கல்பனா, அலுவலக உதவியாளர் திரு.காளிமுத்து, கணினி ஆபரேட்டர் திருமதி.ரம்யா, திருமதி.காதிஜாஷிபானா, திருமதி.

ஜீவரத்தினம் ஆகியோர் இருந்தார்கள். அவர்களை சோதனை செய்தபோது கணக்கில் காட்டப்படாத பணம் ஏதும் இல்லை. இந்த சோதனையின்போது கைப்பற்றப்பட்ட பணம் ரூ.16,000/- மற்றும் கண்டுபிடிக்கப்பட்ட மொத்த பண பரிவர்த்தனையான ரூ.11,28,200/-க்கான பண பரிவர்த்தனைகள் ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்த வேலைகள் செய்வதற்கு வட்டார வளர்ச்சி அலுவலர், பொறியாளர்கள் மற்றும் அலுவலக ஊழியர்களுக்கு செயலி மூலம் அனுப்பியிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. இது குறித்து தயாரிக்கப்பட்ட இந்த செயல்முறை நடவடிக்கைகள் இன்று (22.09.2026) பிற்பகல் 15.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு இரவு 22.15 மணிக்கு முடிக்கப்பட்டது. ஒப்பம்.ச.சுப்பிரமணியன், Spl. Tah (SSS), Shencottai ஒம்.மற்றும் சிலர்.

The original complaint, Proceedings dated 22.09.2026 of Special Tahsildar, Social Security Scheme, Shencottai Taluk, Tenkasi District and original FIR were sent to the Hon'ble Principal District Sessions Judge, Tenkasi and copies sent to concerned higher officials.

22/9/2026

M. PAUL SUTHER.
DSP. VAAC
Tenkasi.